[10th August 1965

Distribution of Ammonium Sulphate in North Arcot District

* 179 *Q.*—SRI S. J. RAMASAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of ammonium sulphate distributed in North Arcot District, taluk-wise during the period between November 1964 and March 1965?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது அமோனியம் சல்பேட் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாக வழங்கப்படுகிறதா அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாக வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது சில ஜில்லாக்களில் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் செங்கம் தாலுகாவுக்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அங்கே இருப்பவர்கள் அதை விரும்பவில்லையா? அல்லது அங்கு போதுமான அளவுக்கு சப்ளை செய்யப்படவில்லையா?

கனம் திரு. பூ. கக்கன் : கேட்டவர்கள் குறைவாகக் கேட்டார்களோ என்னவோ தெரியவில்லை. மேற்கொண்டு தகவல்கள் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அமோனியம் சல்பேட் சரிவர விநியோகிக்கப்படவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : சரிவர கொடுக்கப்படவில்லை என்ற குறை இல்லை. உரம் ஜாஸ்தி வேண்டுமென்று விவசாயப் பெருமக்கள் கேட்பதால் தேவைக்குத் தக்கபடி வெகு சீக்கிரம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்பொழுது விவசாயிகள் இந்த சூப்பர்பாஸ்பேட்டு உரத்தை அதிகமாக உபயோகப்படுத்துவதால் அது அதிகமாகத் தேவைப்படுகிறது. இதைத் தயாரிக்கின்ற கம்பெனிகள் ரா மெட்டீரியல்ஸ் கிடைக்காத காரணத்தால் அதிகமாகத் தயாரிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் ரா மெட்டீரியல்ஸ் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

a **Printed as Appendix III on page 709.**